ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம :

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம :

சேட்லூரார் நூலாராய்ச்சி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 JAN 1934
MADRAS

[ஸமீபகாலத்தில் சேட்லூரார் வெளியிட்டிருக்கிற திவ்ய ப்ரபந்த வைபவமென்னும் நூல் பெரும்பாலும் உபயோக மற்ற வம்பு வார்த்தைகளால் நிறைக்கப் பட்டிருக்கிற தென்பதும், தேசிகன் திருவுள்ளத்திற்கு விருத்தமாகவே யெழுதுகிற சேட்லூரார்க்கு தேசிகதர்சநாசாரியரேன்கிற உபாதி உலகுக்கே உபாதி யென்பதும் அண்ணங்கராசாரிய ருடைய உக்திகளில் தேசிக பக்தர்கள் அவசியம் கண்டிக்க வேண்டியவைகளைக் கண்டிக்காமல் ஆமோதனம் செய்தும் கண்டிக்க வேண்டாத யுக்தமான விஷயங்களை வீணாகக் கண்டித்துக் கொண்டும் சேட்லூரார் நூலியற்றுவது வெறுக்கத்தக்கது என்பதும் இதில் நிரூபிக்கப் படுகின்றன.]

1—9—1933

...புலியூர் - ஸ்ரீரங்கார்யா.

Q2
N33
176653

...EWMAN PRES... ADRAS.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

27 JAN 1934
MADRAS

சேட்லூரர் நூலாராய்ச்சி.

[ஸமீபகாலத்தில் சேட்லூரர் வெளியிட்டிருக்கிற திவ்யப்ரபந்த வைபவமென்னும் நூல் பெரும்பாலும் உபயோகமற்ற வம்பு வார்த்தைகளால் நிறைக்கப் பட்டிருக்கிறதேன்பதும், தேசிகன் திருவுள்ளத்திற்கு விருத்தமாகவே யெழுதுகிற சேட்லூரரர்க்கு தேசிகதர்சநாசாரியரேன்கிற உபாதி உலகுக்கே உபாதி யென்பதும் அண்ணங்கராசாரியருடைய உக்திகளில் தேசிக பக்தர்கள் அவசியம் கண்டிக்க வேண்டியவைகளைக் கண்டிக்காமல் ஆமோதனம் செய்தும் கண்டிக்க வேண்டாத யுக்தமான விஷயங்களை வீணுகக் கண்டித்துக் கோண்டும் சேட்லூரர் நூலியற்றுவது வேறுக்கத்தக்கது என்பதும் இதில் நிரூபிக்கப் படுகின்றன.]

நிகழும் ஆவணி மாதத்தில் ஸ்ரீரங்கத்திலிருந்து வெளிவந்த திருவரங்கம் பெரிய கோயில் என்கிற ஸஞ்சிகையை யான் படித்துப் பார்த்ததில் காஞ்சீபுரத்தில் "சேட்லூர் தாண்டவ கண்டநம்" என்கிற ஒரு அற்புதமான நூல் வெளிவந்திருப்பதாக அறிந்து அதை உடனே வரவழைத்துப் பார்த்தேன். சேட்லூர்ஸ்வாமியின் மிக்க பரிதாபநிலையை அறிந்து 'ஐயோ இப்படியும் ஒருவருக்கு ஒரு விதியுண்டோ!' என்று மிகவும் வருந்தியழுதேன். அதில் சேட்லூர் ஸ்வாமியின் சில நூல்களை ஆராய்ந்து 52 தவறுகள் காட்டியிருந்ததை வடமொழி தென்மொழி வல்லுநர்களைக் கூட வைத்துக் கொண்டு பலதடவை பரிசீலனை செய்தேன். அதில் எழுதியிருக்கிறபடி அந்த (சேட்) ஸ்வாமிக்கு உபயபாஷையிலும் மிக்கவுழல் என்றே நிச்சயிக்க நேர்ந்தது. "பலபல பிருதுகளைச் சுமந்துகொண்டிருக்கும் அந்த சேட்ஸ்வாமி, ஆனாலும் இப்படி மோசம் போய் விடுவாரா! அவரையே நேரில் கேட்டால் ஷை 52 விஷயங்களில் ஏதோ சிலதுகளுக்காவது விடை கிடைக்காமற போகுமா, கேட்டுத்தான் பார்ப்போமே" என்று ஆவல்கொண்டு அவருருக்கு ஓடினேன். விழுந்து விழுந்து எழுந்து விண்ணப்பம் செய்தேன். விடநாகம் போல் சீறி விழுந்தார். அஹீந்திரபுரமாகையாலே இது ஒக்கும் என்று எண்ணினேன். பலகால் வணங்கிக் கைகூப்பி கெஞ்சிக்

கேட்டேன். பூணூலை உருகுவதும் வேஷ்டியை உதறுவதும் திருமண்காப்பைப் பார்த்துக்கொள்வதும் ஆகாசத்தை நோக்கு வதும் தலையை யாட்டுவதும் விஷயமில்லாத வசவுகளைப் பொழிவது மாய்ப் போதைப் போக்கினார். வருந்தி விடைபெற்று வந்து விட்டேன். வரும்போது திவ்யப்ரபந்த வைபவம் என்று தாம் இயற்றிய (இப்போது தான் அச்சிட்ட) ஒரு கிரந்தத்தை ஸாதித்து "இதைப் படித்துப்பாரும், என்னுடைய பாண்டித்யத்திற்கு எவ்வளவோ ஆச்சரியப்படுவீர்" என்று நியமனம் தந்தார். அதைப் பிரித்த வுடனே "திகசுசிமவிநீதம் நிர்த்தயம்" என்கிற ஆளவந்தார் ஸ்தோத்ர ஸ்ரீஸூக்தியை உதாஹரித்திருந்தது கண்ணில் தென்பட்டது. இந்த ச்லோகத்தின் வியாக்யானத்தில் ஏற்கனவே காஞ்சீபுரம் அண்ணங்கராசாரியர் ஒருதலையாக எழுதியிருந்த ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. அங்கே அவர் என்ன எழுதியிருக்கிறு ரென்றால்—(ஸ்தோத்ரரத்ன வுரைப்பதிப்பில் பக்கம் 117-ல்) P. B. A. எழுதியிருப்பதாவது :—)

"இந்த ச்லோகத்தில் முதலடியில் நிர்தயம் என்ற பாடமே தொன்று தொட்டுப் பெரியோர்களநுஸந்திப்பதும் ஆளவந்தார் அருளிச் செய்ததும் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானித்தது மாம். நிர்தயம் என்றிருப்பதைவிட நிர்பயம் என்றிருந்தால் நன்று யிருக்குமென்றெண்ணிய தேசிகன் அப்படியே பாடத்தைத் திருத்தி பாஷ்யமிட்டருளினர். அவ்வளவோடு நில்லாமல் நிர்தயம் என்பது சிலருடைய பாடம் என்றெழுதி, அப்பாடத்தில் பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த அர்த்தத்தைவிட வேறு வகையாக உரைத்தல் யுக்தம் என்றும் உரைத்தனர். ....ஸ்வாரஸ்யத்தை அறியகில்லாதே ரஸவிஹீநமான வேறொரு பொருளைச் சொல்லி வைத்தது ரஸிக கோஷ்டீபஹிஷ்டம்"

503
294'5

என்று எழுதிக்கிடக்கிறது.

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனுடைய ஸ்தோத்திர பாஷ்யத் தின்படி ஷெ ஆளவந்தார் ஸூக்தியில் நிர்ப்பயம் என்கிற பாடமே முக்கியமாக இருக்கத் தகுதியுடைய தென்பது அதிக படிப்பில்லாத சிறுவனுக்கும் தெரியக்கூடியது. இந்த சேட் ஸ்வாமி ஷெ ஸ்தோத்ர பாஷ்யத்தைப் பாராதவரன்று. அதை [illegible] பெரிய சுமைச் சுவடியாகவே வெளியிட்டிருக்கிறீர். அதில் பக்கம் 319-ல் இவர் மூலத்தை நிர்த்தயம் என்றே ஒருதடவைக்கு இரண்டு தடவையும் பதிப்பித்து வைத்தார். இப்பாடத்தைப் பற்றி பாஷ்யத் தில் ஆசாரியன் ஸாதித்திருக்கிற ஸ்ரீஸூக்தியையும் மாறாக மொழி பெயர்த்து வைத்தார். அங்கு ஸ்தோத்ரபாஷ்யத்தை எடுத்துப் பாருங்கள். நிர்த்தயம் என்று சிலபேர்கள் பாடம் வைத்துக்

கொண்டதாக தேசிகன் ஸாதித்திருக்கிறாரே தவிர 'அது சில புஸ்தகங்களிலுள்ள பாடம்' என்று ஸாதிக்கவில்லை. தேசிகன் அப்படி திருவுள்ளம் பற்றவுமில்லை. ஆங்கே சேட் ஸ்வாமியின் மொழிபெயர்ப்பு தேசிக பாஷ்ய திவ்ய ஸூக்தியோடு ஸம்பந்தப் படாததாகவே யிருக்கிறது. அது எப்படியானாலும் போகட்டும். இங்கு நிர்ப்பயம் என்பதே தேசிகன் உகந்தருளின ஸரியான பாட மென்றும் நிர்த்தயம் என்பது இதர ஸம்பிரதாயஸ்தர்கள் கொண்ட பாடம் என்றும் நமக்கு ஸ்பஷ்டமாக விளங்குகிறது. ஸ்ரீ உபயவே. மாம்பலம் பண்டித. வாஸுதேவாசாரியர் ஸ்வாமியும் ஸ்தோத்ர ரத்ந வுரை இயற்றி வெளியிட்டிருக்கிறார். அதை யெடுத்துப் பார்த்தாலும் தேசிக ஸம்ப்ரதாய பாடம் நன்றாய் விளங்குமே. அண்ணங்கராசாரியரோ வென்றால் பெரியவாச்சான் பிள்ளை உகந்து கொண்ட பாடத்தையே மதித்து தேசிகனுடைய பாடத்தை உபே க்ஷணீயம் போல் ஒதுக்கிவிட்டிருக்கிறார். அதை இந்த சேட் ஸ்வாமி பாராதவரன்று, அண்ணங்கராசாரியருடைய அந்த ஸ்தோத்ரரத்ந வியாக்யான புஸ்தகம் முக்கியமாக இவரை உத்தே சித்தே பிறந்ததாக விளங்குகிறபடியால் அதை இவர் பார்த்தே யிருந்தும் தேசிகனுகந்த ஸ்வரஸமான பாடத்தை விட்டு வேறு பாடத்தை இவர் ஆதரிப்பது தகுமா? அண்ணங்காசாரியர் எழுதி யிருப்பதை இவர் பார்க்கவேயில்லை என்றே வைத்துக் கொள்ளுவோம். தேசிகனுடைய பாஷ்யம் கை விளக்காக இருக் கிறதன்றோ. அதற்கு விருத்தமாக நடந்து கொள்ளுகிற இவர் தேசிகதர்சநாசாரியர் என்று தம்மை முழநீளம் நீட்டினால் இதற்கு என் ன அர்த்தம்? இவ்வளவு ஆராய்ச்சிகூட இவர்க்கு இல்லை யென்றால் இவர் தாம் வெள்காமற்போனாலும் உண்மையான தேசிக ஸம்ப்ரதா யஸ்தர்களுக்குத் தலை வணக்கமாய் இருக்காதோ? இவர் வாயைக் கையை மூடிக்கொண்டு கிடந்தால் அநவத்யமான தேசிக ஸம்ப்ர தாயம் எவ்வளவோ செழித்து ஓங்குமே. அண்ணங்கராசாரியர் எதை எழுதிவிட்டாலும் அதை இந்த சேட்ஸ்வாமி தலைமேல் வைத்துக்கொண்டு கூத்தாடுகிறார்.

இவர் ஸங்கல்ப ஸூர்யோதய மொழி பெயர்ப்பு அச்சிட்ட போது அதில் முகவுரையில் (பக்கம் 2-ல்) "ப்ரபோத சந்த்ரோதயத் தைப்பாரீர் என்று க்ருஷ்ணமிச்ரன் தன்னுடைய அத்வைதபரமான நாடக விசேஷத்தைக் காட்ட அது பலபடியாலும் கண்டிதமாம்படி ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் என்னும் நாடகத்தை அருளிச் செய் ததும் இவர் பகவானுடைய அவதார விசேஷம் என்பதைக் காட்டு கிறது" என்று எழுதியிருக்கிறார். அதில் பக்கம் 7-லும் இப்படி யே யெழுதியிருக்கிறார். இதைக் கண்டித்து அண்ணங்கராசாரியர் பாதுகா ஸஹஸ்ராவதார தத்துவத்தில் தேசிகனுக்கும் கிருஷ்ண

மிச்ரனுக்கும் மிகவும் காலபேதமிருப்பதாக சாஸனம் முதலான ஸாக்ஷியங்களைக் கொண்டு நிரூபித்து விட்டாரென்று கண்ட இவர் அதை சிரஸாவஹித்து அந்த ஐதிஹ்யம் தப்புதான் என்று இப்போது தாமே பிரசுரம் செய்து விட்டார். ஏதுக்கு இப்படியெல்லா மிவர் அண்ணங்கராசாருடைய வாக்குக்களையே நிதியாகக் கொள்ள வேண்டும். இவருக்கு பதில் சொல்லத் தெரியாவிட்டால் அதில் வழவழ வென்று போய்விடக் கூடாதா? வாய்மூடியாவது கிடக்கலாகாதா? அண்ணங்கராசாரியர் பெரிய ஆராய்ச்சிக்காரராகவும் அவர் நிர்ணயிப்பதே ஸரி என்பதாகவும் இவர் எழுதிவிட்டு தேசிக தர்சநாசாரியர் என்றும் தம்மைப் பிரசுரம் செய்து கொள்ளுகிற வெட்கக்கேடு உண்மையான தேசிகதர்சநஸ்தர்களுக்கு எவ்வளவு பரிதாபமாயிருக்குமென்பதை விவேகிகளே அறிவார்கள்.

அண்ணங்கராசாரியரை எந்த விஷயங்களில் கண்டிக்கவேண்டுமோ அந்த விஷயங்களில் இவர் அவரைத்தழுவிக்கொண்டு, கண்டிக்க வேண்டாத விஷயங்களில் வீணாக இவர் பரிச்ரமப்படுவதும் நமக்கு இரண்டாவது பரிதாபம். இப்போது இந்த சேட்லூரார் வெளியிட்டிருக்கிற திவ்யப்ரபந்த வைபவ நூலில் வீணான துராக்ரஹத்துடன் சில விஷயங்களை எடுத்துக்கொண்டு இவர் கண்டனஞ் செய்கிறார். இந்த ஸ்வாமிக்கு ஸொந்த வூரில் பிரபல கக்ஷிபேதங்கள் ஏற்பட்டிருப்பதால் எதிர்க்கக்ஷிக்காரர்களான வேதபாராயண ஸ்வாமிகளைத் தாக்கவேணு மென்கிற முக்கிய எண்ணங் கொண்டே இவர் எதையாவது எழுதிவருகிற வழக்கம். ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளில் இயற்கையான ஆதரமோ அவற்றில் ப்ராவீண்யமோ இவர்க்கில்லையென்பது ஏற்கனவே மஹான்களால் வெளியிடப் பட்டிருக்கிறது. ஆழ்வார்களிடத்திலும் அவர்களின் ஸ்ரீ ஸூக்திகளிலும் கபட பக்தியை ஏறிட்டுக் கொண்டாலும் நல்லது தான். "பொய்யே கைம்மை சொல்லிப் புறமே புறமேயாடி மெய்யே பெற்றொழிந்தேன்" என்று ஆழ்வாரே அருளிச்செய்கிறா ரல்லவோ? அந்த ரீதியிலே இவருடைய கபட பக்தி நாடகமும் இவரை ஏதேனும் ஒரு பிறவியிலே கரையேற்றக்கூடும். முக்கியமாகவிவர் எதிர்க்கக்ஷியாருக்கு ஒரு உத்வேகத்தை உண்டாக்க விரும்பியே இப்போது திவ்ய ப்ரபந்த வைபவம் வெளியிட்டிருக்கிறாரென்பது ஸ்பஷ்டமாகவே விளங்கும். ஆழ்வார்களின் பெருமையையும் அருளிச் செயல்களின் பெருமையையும் ருஜுவாக எடுத்துரைத்தால் இதில் ஸ்ரீவைஷ்ணவரெவரும் அருவருப்புக் கொள்ளக் காரணமேயில்லை எந்த விஷயத்திற்கும் ஒரு மரியாதை யுண்டு. அளவுக்கு விஞ்சினால் அம்ருதமும் விஷமாமென்பர். உபய ஸம்பிரதாயத்திலுமுள்ள பூருவர்கள் மேற்படி பெருமைகளை எவ்வளவோ பேசியிருக்கிறார்கள். அதைத் தொகுத்தும் அதைத் தழுவியும் இவர் எழுதினால் எல்லாரும் தலைமேல்

தரங்கிக் கொண்டாடத்தக்கதாகவே யிருக்கும் இவரோ வென்ருல் வீணை கண்டனங்களை வளர்த்திக்கொண்டும் இல்லாத வசனங்களை [பாஞ்சராத்ரவிசனமென்றும் உபநிஷத்வாக்யமென்றும்] கல்பித்துக் கொண்டும் தலை நோவு தலையெடுக்கும்படி எழுதுகிருர் இவர்க்கு இது ஜந்மஸித்தமாய் விட்டது.

ஆழ்வாராசார்யர்களுடைய திருநாமங்களும் பிரபந்தங்களின் எண்ணிக்கைகளும் முதலான ஸகல விஷயங்களும் பாஞ்சராத்ரங்களிலும் உபநிஷத்துக்களிலு முள்ளதாக இவர் உதாஹரிக்கிருர். த்ராமிடப்ரஹ்மோபநிஷத் என்று ஒரு உபநிஷத்திருப்பதாக அதிலிருந்து பல வாக்கியங்களை உதாஹரிக்கிருர். இப்படிப்பட்ட வசநராசிகள் எந்த பூர்வாசாரியரால் கையாளப்பட டிருக்கிறதோ தெரியவில்லை. "க்வசித்க்வசித்தென்று இவராவிர்ப்பாவம் கலியுங் கெடும் போலே ஸூசிதம்" என்று அருளிச்செய்த ஆசார்ய ஹ்ருதயகாரர் பொதுப் படையான் ஒன்றிரண்டு ச்லோகங்களை அவலம்பித்து அவர்ருல் ஆழ்வாருடைய பெருமை ஸூசனையாக ஏற்படுகிறது என்று காட்டியிருக்கிருரே தவிர, ஸ்பஷ்டவசநமாக ஒன்றுகூட ஒரு ஆசார்யராலும் உதாஹரிக்கப் பட்டிருக்கவில்லை. அங்கே வியாக்கியானத்தில் அதிசப்படியாகக் காணும் சிலச்லோகங்களும் தாளகோசங்களிற் கிடையா தென்றும் அச்சில் நுழைக்கப்பட்டதென்றும் பிராமாணிகர்கள் நிரூபிக்கிருர்கள். "முன்னடிம் பின்னடிஞ்சாபி ஸஹஸா பரிகீர்த்தயேத்" என்பது போன்ற வசனங்கள் வெளிவரும்போது இனி ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமி, திருக்குடந்தை ஸ்ரீ கோபால தேசிகன் முதலிய மஹான்களைப்பற்றின பாஞ்சராத்ர உபநிஷத் வசனங்களும் விரைவில் வெளிவர வேண்டியவைகளே. குருகாபுரீ மாஹாத்மியத்திலே மணவாள மாமுனிகள் வைபவபரமாக ஏழெட்டு அத்யாயங்கள் இருப்பதாக ஸ்ரீ தாளகோசங்கள் காட்டுகிருர்களாம். இனி எல்லாம் சிரஸாவஹிக்க வேண்டியவைகளே. இவை கிடக்கட்டும்.

இந்த திவ்யப்ரபந்தவைபவ நூலில் சேட்ஸ்வாமி வீணை கண்டனங்களைச் செய்திருக்கும் விஷயங்களை யெடுத்துக் காட்டுகிறேன். திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும் ஒரே பிரபந்தமாம்; தனித்தனி பிரபந்தம் அல்லவாம். நம்மாழ்வாராலேயே நாதமுனிகளுக்கு உபதேசிக்கப்பட்ட இராமாநுச நூற்றந்தாதியும் சேர்ந்தே நாலாயிரக்கணக்குத் தேறவேண்டுமாம். திருமடல்களைப் பல பாட்டுக்களாகப் பிரித்தே தீரவேண்டுமாம். ஆக இந்த மூன்று விஷயங்களையும் இவர் ஸித்தாந்தமாகக் கொண்டு இப்படிக்கு இணங்காத பேர்களைக் கண்டனம் செய்கிருர். யாரோவொரு கடிநபத தீபிகாகாரர் பூர்வபக்ஷி யென்பது வெளிபாவனை.

அண்ணங்கராசாரியர் திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில் ஷெ விஷயங்களைப்பற்றி ப்ரஸங்கித்திருப்பதால் அவரையே முக்கிய மாகப் பூர்வபக்ஷியாக நெஞ்சிற்கொண்டு இவர் கண்டன மெழுது கிறாரென்பது விளங்குகிறது. ஷெ விஷயங்களில் இவர் பரபரப்புக் கொண்டது மிகவும் வீணானது.

இவர் அண்ணங்கராசாரியரை அவசியமாகக் கண்டிக்க வேண் டிய விஷயங்களில் வாயைக் கையை மூடிக்கொள்வதும் கண்டிக்க வேண்டாத விஷயங்களில் வீண் தடபுடல் செய்வதுமா யிருக்கிற படியால் இவருடைய பரிச்ரமங்கள் காசுக்கு முதவாதவை என்பதை நானே நிரூபிக்கிறேன். திருப்பல்லாண்டு தனிப்பிரபந்தமே யாகும். ‘வண்ணமாடங்கள்’ தொடங்கியே பெரியாழ்வார் திருமொழியாகும். தேசிகன் பிரபந்த ஸாரத்தில் செய்யுளமைக்கும் ஸௌகரியத்திற் காக ஷெ இரண்டையும் ஒன்று சேர்த்துப் பாசுரலக்கம் போட் டிருப்பதும், இவர் உதாஹரிக்கிற வியாக்யான வாக்கியங்களும் ஏகப்பிரபந்தத்வ ஸாதகமாகமாட்டா. திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தமே யென்பதை நிலைநாட்டக் கூடிய பிரமாண யுக்திகள் பலவுண்டு. திவ்யப்ரபந்த வியாக்கியானங்களைக் காலக்ஷேபம் செய் கிறவர்கள் திருப்பல்லாண்டு வியாக்கியானத்தை முடித்துவிட்டு இஷ்டமான வெவ்வேறு பிரபந்தங்களின் வியாக்கியானங்களைக் கால க்ஷேபம் செய்து தலைக்கட்டும் ஸம்பிரதாயம் எங்கு முள்ளது. திருப்பல்லாண்டு தனிப்பிரபந்தமன்றாகில் அதன் வியாக்கியானத் தை மாத்திரம் ஸேவித்து நிறுத்துவதும் மூலம் கற்பவர்கள் அதை மாத்திரம் கற்று வேறு பிரபந்தங்கள் கற்கப் புகுவதும் ப்ரத்யவாய ஜநகமாகு மன்றோ? ‘திருவாய்மொழி முழுவதையும் ஓதி முடிக்க சக்தியற்றவர்கள் கோயில் திருவாய்மொழியை ஓதிவைக்குமா போலே இதுவும்’ என்று சொல்லுகிறோ மென்னில், உடையவர் காலத்தில் திருவவதரித்ததும் பூர்வாசார்யர்களால் பரிக்ரஹிக்கப் பட்டதுமான திவ்யஸூரிசரிதத்தில் பெரியாழ்வார் வைபவம் பேசு கிற ஐந்தாவது ஸர்க்கத்தில் கடைசி ச்லோகத்தில் “ க்ருத்வா விச்வ ஹிதம் ப்ரபந்தயுகளம் ஸ்ரீ பட்டநாதஸ் ஸுதீ:” என்று இரண்டு திவ்யப்ரபந்தங்கள் பெரியாழ்வாரருளிச் செய்ததாக ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்கும்போது இந்தப் பேயருடைய குயுக்திவாதங்களைப் பேணுவாரார்கொல்? பெரியாழ்வாருடைய வாழித்திருநாமத்தில் “ நல்ல திருப்பல்லாண்டு நான்மூன்றோன் வாழியே, நானூற்றறுபத் தொன்றும் நமக்குரைத்தான் வாழியே” என்றுள்ளதையும் கவ னிப்பது.

பூர்வ உத்தர மீமாம்ஸைகளின் ஐக சாஸ்த்ரியத்தை இங்கே நிதர்சநமாகக் காட்டுவது தகாது. அந்த விசாரமே வேறு. அந்த நியாயத்தை இங்கு அதிதேசிப்பதானால் ‘நாலாயிரமும் சேர்ந்து

ஒரே க்ரந்தம்' என்றே நிர்வஹிக்க அருமையில்லை. நாலாயிரம் முழுவதையும் பதினான்கு பிரபந்தங்களாகப் பூருவர்கள் வகுத்திருக்கிறார்களே, அது இவர்க்குத் தெரியாதே. ஆசார்ய ஹ்ருதயத்தில் "வேத சதுஷ்ட யாங்கோபாங்கங்கள் பதினாலும் போலே" இத்யாதி சூர்ணையை நோக்குக. இதன்படி திருச்சந்த விருத்தமும் நான்முகன் திருவந்தாதியுஞ் சேர்ந்து ஒரு பிரபந்தம்; திருமாலையும் திருப்பள்ளியெழுச்சியும் சேர்ந்து ஒரு பிரபந்தம். இந்த கணக்கிலே திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியுஞ் சேர்ந்து ஒரு பிரபந்தமாயிருக்கத தடையில்லைதான். ஒவ்வொருவிதமான நோக்கத்தைக் கொண்டு ஒவ்வொருவிதமான யோஜனை அவதரித்துள்ளது. அவற்றின் மருமங்களை ஆராய்ந்தறிய இவர் இந்த ஜன்மத்தில் பாக்கியம் பண்ணவில்லையே. வாயெடுத்ததெல்லாம் இவர்க்குக் கண்டனவேலையாகவே யிருக்கிறது. மூஷிகாவதாரம் போலும். திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தமன்று என்று ஆக்ரஹத்தோடு வாதிக்குமிவர் இதனால் என்ன அபீஷ்டம் ஸாதிக்கப் போகிறார். கல்பிதமான ஒரு பாஞ்சராத்ர வசனத்திற்கு இராமாநுச நூற்றந்தாதியும் விவக்ஷிதம் என்று ஸாதிப்பதே இவர்க்கு உத்தேச்யம். அந்த பாஞ்சராத்ரத்தில் தேசிகப்ரபந்தங்கள், ஞானஸாரம், ப்ரமேயஸாரம், அஷ்டப்ரபந்தம், ஸப்தகாதை, உபதேசரத்னமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, பிள்ளையந்தாதி இவற்றைப் பற்றின வசனங்களையும் வெளியிட்டுவிட்டால் ஸ்ரீ வைஷ்ணவர்களின் பிராமாணிகத்வம் பரமபோக்யமாக ப்ரகாசிக்குமே.

இராமாநுச நூற்றந்தாதியை உபய ஸம்பிரதாயஸ்தர்களும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளோடொப்பந்தம் திருக்கார்த்திகைக்குப் பின்னிட்ட அநத்யயனகாலத்தில் ஓதாமலிருப்பது நாடெங்குமுள்ளது. இதனால் அந்த நூற்றந்தாதிக்கு ஏற்படுகிற கௌரவம் போராதா? இதில் மதபேதங்களிருப்பதாகக் கிளறிக் கண்டனஞ் செய்வது வேலைபற்றவன் வேலையேயாகுமன்றோ?

பெரியாழ்வார் திருமொழி தனிப் பிரபந்தமா யிருந்தால் அதற்காக வேறு தனியன் ஏற்பட்டிருக்குமென்று கொண்டு 'ஒரு தனியனை இரண்டு பிரபந்தங்களுக்கு அநுஸந்திப்பது ஒரு இடத்திலும் காணப்படவில்லை' என்று (பக்கம் 13-ல்) எழுதுகிறார். திருநாராயணபுரத்து அநுஸந்தாந முறைமையை க்ஷேபிக்கிறார். அந்தோ! கூபகூர்மத்துக்கு என்ன சொல்லுவோம். அயிந்தைக் கிராமந் தவிர வேறொரு திவ்ய தேசமும் தெரியாது பாவம். எங்குப் போனாலும் கோஷ்டீ பஹிஷ்க்ருதராகவே யிருக்கவேண்டிய கடப்பாடுடையவர். பெரிய திருமொழிக்கு என்ன தனியன்? திருக்குறுந்தாண்டகத்துக்கு என்ன தனியன்? திருநெடுந்தா

கத்துக்கு என்ன தனியன்? இவர்க்குத் தெரியுமோ? ஒவ்வொரு பிரபந்தத்திற்கும் தனித்தனியே தனியனிருப்பதாகச் சொல்லுகிறவர் இப்போது ஆகாசம் பார்க்கவேண்டியதே.

கிடக்கட்டும். இதெல்லாம் ஒரு விஷயமன்று. திருமடல்களைப்பற்றி தடபுடலாக எழுதியிருக்கிறார். அண்ணங்காராசாரியரையே குறிப்பில் கொண்டு கண்டனமெழுதுகிறாரிக்கு. அண்ணங்கராசாரியர் சிறிய திருமடலுக்கு எழுதியிருக்கும் திவ்யார்த்த தீபிகையின் முகவுரையில் தமிழிலக்கணப் புலவர்களும் தென்னாசார்யர்களும் வடவாசார்யர்களும் ஒருங்கே பரமத்ருப்தி பெறும்படி எல்லாவழிகளையும் ஸமந்வயப் படுத்தி அழகாக எழுதி முடித்திருக்கிறார். அதன்மேல் வாய்திறக்க மண்டுக்களுக்கு முடியுமா? அவர் எழுதி யிருப்பதை அப்படியே இங்கு உதாஹரித்துக் காட்டுகிறேன்:—

"திருமடல் ஒரே பாட்டு.

இச் சிறியதிருமடல் இலக்கண முறைமைப்படி ஒரே பாட்டாகக் கொள்ளத்தக்கது. இதனை 77½ பாட்டாகக்கணக்கிட்டார் அப்பிள்ளையாசிரியர்; நாற்பது பாட்டாகக்கணக்கிட்டார் ஸ்ரீவேதாந்ததேசிகன். அவர்கள் இப்படி பல பாட்டுக்களாகப் பிரித்துக்கொண்டது இலக்கண முறைமைக்கு இணங்குவதல்ல. மஹான்களாகிய அவ்வாசிரியர்கள் இலக்கண நெறிக்கு முரண்படுமாறு அங்ஙனே பிரித்துக்கொண்டதற்குக் காரணம் இன்னதென்பதை மேலே கூறுவோம். இஃது இலக்கண முறைமைப்படி ஒரேபாட்டென்பதை இப்போது விளக்கப் புகுகிறோம்;—

ஈற்றடி முச்சீரடியாகவும் மற்றையடி நாற்சீரடியாகவும்பெற்று, காய்ச்சீரும் மாச்சீர்விளச்சீர்களும் இருவகை வெண்டளைகளுங்கொண்டு மற்றைச்சீரும் தளையும் பெறாமல், நாள் மலர் என்ற ஓரசைவாய்பாடுகளுள் ஒன்றினாலாவது, காசு பிறப்பு என்ற ஈரசைவாய்பாடுகளுள் ஒன்றினாலாவது முடிந்து, ஒரு விகற்பத்தாலாயினும் இருவிகற்பத்தாலாயினும் வருவது வெண்பா என்று பொதுப்படக்கூறி, இரண்டடியால் வருவது குறள்வெண்பா வென்றும்; மூன்றடியால் வருவது சிந்தியல் வெண்பா வென்றும், நான்கடிகளாய் இரண்டாமடியின் இறுதிச்சீர் முதலிரண்டடிகளின் எதுகையையுடைய தனிச்சொல்லாய் வரப்பெறுவது நேரிசை வெண்பா வென்றும், நான்கடிகளாய்த் தனிச்சொல் இன்றி வருவது இன்னிசை வெண்பா வென்றும், ஐந்தடிமுதல் பன்னிரண்டடியளவும் வருவது பஃறொடை வெண்பா வென்றும். பன்னிரண்டடிக்கு மேற்படின் கலிவெண்பா வென்றும் விசேஷித்து யாப்பிலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளமையால் திருமடல்களிரண்டையும் கலி வெண்பாவாகக்கொண்டு ஒவ்வொரு மடலையும் ஒவ்வொரு பாட்டாகவேகொள்ளவேண்டும். திருமடல்களிரண்டிலும் முற்றும் ஒரே எதுகையாக அமைந்"யும் ஈற்றடி முச்சீராக முடிந்துள்ளமையும் நன்கு நோக்கத்தக்கது.

சங்கத்துச் சான்றோர் இயற்றிய **பன்னிரு பாட்டியல்** என்ற இலக்கண நூலில் இனவியலில் மடலிலக்கணஞ் சொல்லுமிடத்து, "பாட்டுடைத் தலைமகனியற்பெயர்க் கெதுகை, நாட்டிய **வெண்கலிப்பா**வதாகி......காமங் கவற்றக் கரும்பனைமடன்மா, ஏறுவராடவர் என்றனர் புலவர்." என்றதும். "இவ்வாறு வந்தன மங்கையர்கோன் அருளிச்செய்த பெரிய திருமடல் சிறிய திருமடல் என்பன" என்று அதன்கீழ் விவரணங் காட்டியிருப்பதும் அறியத்தக்கன.

"அறம்பொருள் வீடெனு மம்முக்கூற்றின் திறங்கடிந் தரிவையர் திருத்துறு மின்பம் பயனெனக் கலிவெண் பாவாற் றலைவன்பெயரெதுகையினிற் பேசுதல் வளமடல்" என்ற இலக்கண விளக்கமும் அறியத் தக்கது.

வச்சணந்திமாலை யென்னும் **வெண்பாப் பாட்டியற்** செய்யுளியலில் மடலிலக்கணஞ் சொல்லவந்த "உற்றவறம்பொருள் வீடெள்ளியுயர்த்தின்பம். பொற்றொடி காதற்பொருட்டாகப்—பெற்றி. யுரைத்த கலி வெண்பா மடலிறைவனெண்பேர். நிறைத்த வெதுகை நிறுத்து" என்ற வெண்பாவும் உணரத்தக்கது. இன்னும் இவ்விஷயத்தைப் பன்னியுரைக்குங்காற் பாரதமாமென்று இவ்வளவிலே நிற்கின்றோம்.

ஆகவே திருமடல்களைப் பலபாட்டுகளாகப் பிரித்தல் இலக்கண முறைமைக்கு எவ்வகையாலும் இணங்காதாயினும், வேதாந்ததேசிகனும் அப்பிள்ளையும் பலபாட்டாகப் பிரித்துக்கொண்டது **ஔசித்யம்** என்கிற பிரமாணத்தின்படி ஒருவாறு பொருந்தக்கூடும். அதாவது ஆழ்வார்களருளிய தமிழ் வேதத்திற்கு **நாலாயிரம்** என்ற திருநாமம் நாடெங்கும் வழங்கி வந்திருக்கின்றது; ஏற்றக்குறைவின்றிச் சரிசமமாக நாலாயிரம் பாட்டுக்கள் உள்ளனவாகக் காட்டவேணுமென்கிற திருவுள்ளம் அவ்வாசிரியர்கட்கு உண்டாயிற்று; ஸ்ரீதேசிகன் இராமாநுச நூற்றந்தாதியையுஞ் சேர்த்து நாலாயிரமாகக் கணக்கிடத்திருவுள்ளம் பற்றினர்; அப்பிள்ளை அந்த நூற்றந்தாதியைத் தவிர்த்து நாலாயிரமாகக் கணக்கிடக் கருதியருளினர். திருமடல்களை ஒவ்வொரு பாட்டாகக் கொண்டால் இவர்களுடைய திருவுள்ளம் நிறைவேறுதற்கு அவகாசமின்றி யிருந்தது. இரண்டு திருமடல்கள் தவிர மற்ற திவ்ய ப்ரபந்தங்கள் இருபத்திரண்டில் ௩௭௭௪ பாட்டுக்கள் மாத்திரமே தேறுகின்றன. இராமாநுச நூற்றந்தாதியின் நூற்றெட்டுப் பாட்டுக்களையுங் கூட்டிக்கொண்டால் ௩௮௮௨ பாட்டுக்கள் தேறுகின்றன. ஆகவே, நாலாயிரத்திற்கு நூற்றுப் பதினெட்டு பாட்டுக்கள் தேவையாயின. அதற்காகச் சிறிய திருமடலை நாற்பது பாட்டாகவும் பெரிய திருமடலை எழுபத்தெட்டு பாட்டாகவும் பிரித்துக் கொண்டு பூர்த்தி செய்தருளினர் தேசிகன். நூற்றந்தாதியையொழிய நாலாயிரம் கணக்கிடத் திருவுள்ளங்கொண்ட அப்பிள்ளைக்கு ௨௨௬ பாட்டுக்[illegible] தேவையாயின. அதற்காக அவர் சிறிய திருமடலை $77\frac{1}{2}$ பாட்டா[illegible] பெரிய திருமடலை $148\frac{1}{2}$ பாட்டாகவுங்கொண்டு கணக்கிட்டுப் பூர்த்[illegible] தருளினர்.

126653

["ஸ்திஸ்தய ஸகிச ஸிந்தநீயா"] உள்ளதற்கு ஒருவழி விடவேண்டும் என்ற நீதியை யடியொற்றி இங்ஙனே ஒரு ஸமாதாநம் காட்டினேமென்க.

இலக்கணப்படி திருமடலை ஒரே பாட்டாகக் கொள்வதே எற்கும். இப்படியாகில், இருநூற்றுச்சொச்சம் பாட்டுக்கள் குறைதலால் நாலாயிரம் என நாட்டார் வழங்குவது சேருமாறு எங்ஙனே யென்னில், உலகத்தில் ஒரு பெரிய தொகைக்குச சில எண்கள் குறைந்தாலும் பெரிய தொகையை யிட்டே வழங்குவதுண்டு; நாலாயிரக்கணக்குக்கு நூறு இருநூறு குறைந்தாலும் நாலாயிர மென்றே வழங்கலாம். [உதாரணம்] நம் ஆழ்வார்கள் "வாணனாயிரந் தோள் துணித்த" என்றும் "இண்டவாணனீரைஞ்ஞூறு தோள்களைத் துணித்த" என்றும் அருளிச்செய்துள்ளமை அனைவருமறிவர்; பரமசிவன் பிரார்த்தனையால் பாணாஸுரனை $ நான்கு கைகளோடும் உயிரோடும் எம்பெருமான் விட்டருளினனென்பது ஸ்ரீ பாகவதாதிகளில் ப்ரஸித்தம். இனி, கீழ்க்குறித்த ஆழ்வார் பாசுரங்களுக்கும் இப்புராண வரலாற்றுக்கும் ஐககண்டியம் பண்ணப்புக்கால், ஆயிரத்துக்கு நாலைந்து குறையினும் ஆயிரமென்றே சொல்லலாமென்று அனைவரும் அங்கீகரிக்கவேண்டுமே. இனி திருவாய்மொழி ஆயிரத்து நூற்றிரண்டு பாட்டாயிருக்க, ஆழ்வார் தாமே "குருகூர்ச்சடகோபன் சொன்ன ஓராயிரம்" என்று பலவிடங்களிலும் அருளிச்செய்தது சேரும்படி எங்ஙனே? பெரியதிருமொழி க0அச பாட்டாயிருக்க, "பொங்குபுகழ் மங்கையர் கோனீந்த மறையாயிரம்" என்றது எங்ஙனே? நூற்றெட்டுப் பாட்டுக்களமைந்த பிரபந்தத்தை "இராமாநுச நூற்றந்தாதி" என்கை சேரும்படி எங்ஙனே? ஆயிரத்தெட்டு ச்லோகங்களமைந்த ஸ்தோத்ரத்தைப் பாதுகாஸஹஸ்ரம் என்றும், எழுபத்தினைந்து ச்லோகங்களமைந்த ஸ்தோத்ரத்தை யதிராஜ ஸப்ததி என்றும் சொல்வது எங்ஙனே? என்றிப்படி பலவற்றையு மெடுத்துக்காட்டிக் கேட்பார்க்கு—ஆயிரத்துக்கு நூறு ஐம்பது மிகுந்தாலும் ஆயிரமென்றே வழங்கலாமென்றும் நூற்றுக்குப் பத்து எட்டு மிகுந்தாலும் நூறென்றே வழங்கலாமென்றும் மறுமொழி யுரைத்தலில் மயங்குவாரில்லையே.

இவ்வுதாஹரணங்களால், ஸ்வல்பம் எற்றத்தாழ்வு அகிஞ்சித்கரம் என்பது நன்கு விளங்கும். இவ்வகையில் நாலாயிரமென்ற வ்யவஹாரம் நன்கு பொருந்தத் தடையில்லை யென்றுணர்க. இங்ஙனம்: பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யதாஸன்.

இதன் மேல் கண்டன மெழுத இவருக்கு என்ன சரக்கு இருக்கிறது?

திருமடல்களை அத்யாபகர்கள் ஆங்காங்கு அனேகவிதமாக ஸேவித்து வருகிறார்கள். அதைக்கொண்டு இவர் ஒரு நிர்த்தாரணம் செய்வதானால் ஸகல திவ்ய தேசங்களிலும் சிறிதும் வாசியில்லாமல் "பல்லாண்டு—அடியோமோடும்" என்கிற இரண்டு பாட்டுக்களைச் சேர்த்து பூர்வார்த்தம் உத்தரார்த்தமாக்கி ஒரே

$ ஹரிவம்சம் விஷ்ணுபர்வத்தில் 185-ஆவது அத்தியாயத்தில் இரண்டு [...] விட்டருளினதாக வரலாறு காண்கிறது; பிரகிருதத்தில் இரண்டு [...]ம்.

176653

பாட்டாகவே ஸேவித்து வருவதால் அதைப் பின்பற்றி அவற்றை ஒரே பாட்டாகவே இவர் நிஷ்கர்ஷிக்க வேண்டும். தேசிகன் முத லான எல்லாரும் அதை இரண்டு பாட்டாகவே கணக்கிடுகிறார்கள். ஆகையால் அத்யாபக ஸேவாக்ரமத்தைக் கொண்டு பாட்டின் ஸங் கியையை நிர்ணயிக்க வேண்டுமென்பது பேதைமையேயாம். திரு மடல்களை தேசிகன் பிரித்திருக்கிற பிரிவு அர்த்தரீதியை அநுஸரித் திருப்பதாக இவர் அபிமாநிப்பதும் திருமடலில் இவர்க்கு ப்ரவேச லேசமுமில்லை யென்பதையே காட்டும். வேதத்தில் பஞ்சாதிகள் பிரித்திருப்பது அர்த்தத்தை நோக்காமல் பதங்களின் கணக்கை மாத்திரம் எப்படி அநுஸரித்திருக்கிறதோ அப்படியுமில்லை. அப் பிள்ளையின் பிரிவும் அப்படித்தான். எந்த நோக்கங் கொண்டு இப்படிப்பட்ட பிரிவுகள் (திருமடல்களில்) உண்டாக்கப்பட்டன வென்றால், இதற்கு அண்ணங்கராசாரியர் என்ன உபபத்தி எழுதி யிருக்கிறாரோ அது தவிர வேறொன்றும் வாசஸ்பதியாலும் சொல்ல முடியாதென்பது திண்ணம்.

அண்ணங்கராசாரியர் காட்டியிருக்கிற இலக்கண நிருபணங் களின்மேல் வாயை அசைக்க முடியாத இவர் எழுதுகிறார்—திரு மடலைப் பல பாட்டுக்களாகப் பிரிப்பதற்கு இணங்கின இலக்கணம் முன்பு இருந்து [நிகமபரிமளத்தோடும் ஸ்தேயாவிரோதத்தோடும் ஸமஸ்யாஸஹஸ்ரியோடுங் கூடவே] அதுவும் லோபித்திருக்கவேண் டுமாம். திவ்யபிரபந்தம் வேதமாகையாலே வேதலக்ஷணம் வேறாகவே யிருக்கவேண்டுமாம். ஸ்ரீ பாஷ்யமங்கள ச்லோகத்தில் உள்ள ஸ்தேம பதப்ரயோகத்திற்கு ஏற்ற வியாகரணம் லோபித்து விட்டதாம்; அதுபோலவே திருமடலிலக்கணமும் லோபித்து விட்டதாம். இப் படி ஒப்புக்கொள்ளா விட்டால் பிரபல தமிழ்ப் பண்டிதராகிய தேசிகனுக்கு ஒரு குறை ஏற்பட்டு விடுமாம். அந்தோ! இந்த ப்ரஸங்கங்களுக்கு எந்த உறுப்பினால் சிரிக்கலா மென்று நமக்கு ஆலோசனை புரியவில்லை.

திவ்ய பிரபந்தம் வேதமே யானாலும் இப்போதுள்ள இலக் கணங்களுக்குக் கட்டுப்படாம லிருக்கவில்லை. இலக்கணத்திற்கு ஒவ்வாத பாடம் காணப்பட்டால் ஆசார்யர்கள் அதை லக்ஷண விருத்த மென்றுஞ் சொல்லி மறுக்கிறார்கள். திருவிருத்தத்தில் 89-ஆம் பாட்டின் ஸ்வாபதேசவுரையிலும் மற்றும் பல விடங் களிலும் இது காணலாம்.

தேசிகன் இலக்கணம் தெரியாதவர் என்று யார் சொல்லு கிறார்கள்? தேசிகன் போயிருக்கிற வழியும் ஒரு ஔசித்யத்தை அநுஸரித்ததே யென்று விளக்கியிருக்கிற அண்ணங்கராசாரியரை நோக்கி இவர் எழுதக் கூடிய அக்ஷரம் ஒன்றுமில்லையே. “கலி வெண்பாவைப் பாட்டுக்களாக நிரூபிப்பதற்கு இலக்கணம் இருந்

திருக்கவேண்டும்" என்று சேட் ஸ்வாமி யெழுதி யிருப்பதை அக்ஷராஸ்யன் பார்த்தால் குலுங்கக் குலுங்கச் சிரித்திடுவான். ஸ்தேம சப்தத்தின்மேல் இன்னது விசாரமென்றும் தத்வடீகையிலுள்ள "ஈத்ருசாநாம்" இத்யாதி காரிகைக்கு இன்னது தாத்பரியமென்றும் அறியாதவரும், அறிந்துகொள்ள இந்த ஜன்மத்தில் அர்ஹதையில்லாதவருமான பேர்வழி அந்த ப்ரஸங்கத்தையெடுத்துக் கொண்டு காடுபாய்வது கஷ்டகாலம்! பெரிய பெரிய விஷயங்களிலும் பெரிய பெரிய க்ரந்தங்களிலும் தமக்கு ப்ரவேசமும் ப்ராவீண்யமு முண்டென்று காட்டிக்சொள்ள வெகு ப்ரயாஸப்படுகிறார். "ஆசையோ தாசில்செய்ய; அத்ருஷ்டமோ கரண்டி சுரண்ட" என்கிற பழமொழியின்படியாகத்தானிருக்கிறது.

இப்புத்தகத்தில் திருமங்கையாழ்வாருடைய திவ்யப்ரபந்த மாகிய திருவெழு கூற்றிருக்கையை, திருவெழுக் கூற்றிருக்கையென்று ஒருதடவைக்குப் பலதடவையாக எழுதுகிறாரிவர். இவருடைய இதர புஸ்தகங்களிலும் இப்படியே யுள்ளது. இலக்கணவினாவிடை கூட வாசியாதவர் என்பது இதனால் கண்ணாடிபோல் விளங்கும். இப்படிப்பட்டவிவர் திவ்ய ப்ரபந்தங்களில் நுழைவதும் இலக்கணமென்ற சொல்மாத்திரத்தை யேனும் அநுவாதம் செய்வதும் தகாது தகாது தகாது தகாது.

இன்னமும் இவரது இப்புத்தகத்திலுள்ள கோணல் குளறல்களை எடுத்துக்காட்டும் சிரமத்தை இப்போது ஏற்றுக் கொள்ளுகின்றிலேன். 'எலியெலும்பனை உறியடித்தடியன்மேல் எத்தனை நாழிகை நீரைவாரியிறைக்கலாம்!?' இனி இன்னொரு நாளைக்கு இன்னொரு புஸ்தகத்தையெடுத்துக் கொண்டு விமர்சிப்போம். இனி இவர் பத்ரிகாலேகிநீஸ்பர்ச ஸம்ந்யாஸம் பண்ணிப்பிழைத்தல் பாங்கு. சேட்லூர் தாண்டவகண்டனத்தில் தேசிகபக்தர்கள் மறுக்கவேண்டிய ஒன்றிரண்டு விஷயங்களுக்கு மறுப்பு விரைவில் வெளிவரும். சேட்லூரருடைய புஸ்தகங்களினால் எத்தனையோ கம்பாஸிடர்களும் பேபர்கிடங்குக்காரர்களும் பயிண்டர்களும் அச்சுக்கூடத்தலைவர்களும் புத்தக வியாபாரிகளும் லாபமடைந்திருக்கும்போது அப்புத்தகங்களினால் யாருக்கும் யாதொரு பயனுமில்லையென்று தாண்டவகண்டனத்தில் எழுதியிருப்பது சரியல்ல. சேட்லூரார்க்கு வியாகரணம் தெரியாதென்றும் எந்த சாஸ்திரமும் தெரியாதென்றும் ஸாஹித்யமும் ஊழலென்றும் இலக்கண இலக்கியப் பயிற்சியும் கிடையாதென்றும் விரிவாக நிரூபணம் செய்திருப்பதும் எதுக்கு? இதில் 'ஸித்தஸாதநம்' என்கிற தோஷமுண்டு.

இங்ஙனம் :

திருப்பாப்புலியூர் - ஸ்ரீ ரங்கார்யா.

Printed at the Newman Press, Broadway, Madras.